# திராவிட மாடல் அரசு

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

17

அந்த அரங்கத்தில் உலக அளவில் பிரபலமான பேராசிரியர்களும், பேராசிரியர்களையே மிஞ்சும் மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் அமர்ந்திருந்தனர். மேடையில் 41 வயதான அந்த இளைஞர், தான் கடந்து வந்த பாதையைச் சொல்கிறார். தன்னால் உயர்ந்த மாணவர்களின் பின்னணி பற்றிச் சொல்கிறார். அவை ஒவ்வொன்றும் அங்கு அமர்ந்திருந்தவர்களைப் புல்லரிக்க வைக்கின்றன. புத்துணர்வு கொள்ளச் செய்கின்றன. கைதட்டல்களால் அரங்கம் அதிர்கிறது.

இது நடந்த இடம் அமெரிக்காவின் எம்.ஐ.டி., எனப்படும் **‘மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி’ கல்வி நிறுவனம். நடந்த ஆண்டு 2014. அரங்கை அதிரவைத்தவர்... ஆனந்த் குமார்.** இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதே எம்.ஐ.டி. மற்றும் ஹார்வார்டு பல்கலைக்கழகங்கள் இணைந்து ஏற்படுத்திய **‘எட் எக்ஸ்’** எனும் கல்வி வலைதளத்தில் கணிதப்பாடம் நடத்த அழைக்கப்பட்டார். இதை ஆனந்த் குமாரே எதிர்பார்த்திருக்க மாட்டார்!

## ஆண்டுக்கு 30 பேர்!

சரி, யார் இந்த ஆனந்த் குமார்..? பீஹார் மாநிலத்தின் ஒரு மூலையில் பிறந்த அவர், கணிதம் படிப்பதற்காகவே பிறந்தார் என்று சொன்னால் அது மிகையல்ல. பள்ளியிலும் கல்லூரியிலும் அவர் கணிதப் பாடத்தை அவ்வளவு விரும்பிப் படித்தார். அதன் விளைவு கல்லூரிக் காலத்திலேயே உலக அளவில் பிரபலமான கணித ஆய்விதழ்களில் கட்டுரைகள் வெளியிட்டார். அது அவரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் மேற்படிப்புப் படிக்க வரவேற்றது.

ஆனால், வறுமை, அவரது கேம்பிரிட்ஜ் கனவை, கனவாக மட்டுமே இருக்கச் செய்தது. அதனால் அவர் சோர்ந்துவிடவில்லை. ‘என்னைப் போன்று திறமை இருந்தும், வறுமையில் வாடும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புகிறேன்’ என்று சபதம் ஏற்றார். அந்த சபதம்தான் இன்று **‘சூப்பர் 30’** என நிலைபெற்றிருக்கிறது!

> **12-ஆம் வகுப்பில் சிறப்பாகச் செயல்படும் 114 மாணவர்கள் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு, இந்த மையத்தில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.**

ஒவ்வோர் ஆண்டும், பீஹாரில் திறமையிருந்தும், வறுமையில் வாடும் 30 மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களை ஐ.ஐ.டி. நடத்தும் நுழைவுத் தேர்வுக்கு தயார்ப்படுத்துவதுதான் ஆனந்த் குமாரின் முழு நேரப்பணி. 2002-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை எண்ணற்ற மாணவர்கள் ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்றுப் பொறியியல் படிப்புக்குத் தேர்வாகியிருக்கிறார்கள். சிலர், மேற்படிப்பு படிக்க வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் பயிற்சிகளுக்கு மாணவர்கள் எவ்வளவு செலவு செய்ய வேண்டும்? சொன்னால் நம்ப மாட்டீர்கள். அனைத்தும் இலவசம். உணவு, தங்கும் வசதி உட்பட!

## தமிழ்நாட்டில் ஒரு ‘சூப்பர் -30!’

ஆனந்த் குமார் பற்றியும், அவரது ‘சூப்பர் -30’ திட்டம் பற்றியும் கேள்விப்படும்போது, ‘ஆஹா... இப்படி ஒரு முயற்சி தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், எத்தனை அரசுப் பள்ளி மாணவர்கள் பயனடைவார்கள்?’ என்ற ஒரு யோசனை நம் மனதில் ஓடுகிறதல்லவா..!

இனி யோசிக்கத் தேவையில்லை. அப்படி ஒரு திட்டத்தை நம் கழகத் தலைவர்-முதலமைச்சரின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ கொண்டு வந்திருக்கிறது. அதில் வெறும் 30 மாணவர்கள் மட்டும்தான் என்ற கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என்பது கூடுதல் சிறப்பு.

## மதிப்புமிகு மாதிரிப் பள்ளிகள்

அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் சிறப்பாக இருக்காது என்கிற எண்ணத்தை மாற்ற, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதில் ஒன்றுதான் மாதிரிப் பள்ளிகள், சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு சிறந்த மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பது.

அதாவது, ஒரு பள்ளியில், 12- ஆம் வகுப்பில், கணிதம், அறிவியல் பிரிவுகளில் 60 மாணவர்கள் படிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த 60 பேருமே மருத்துவமோ அல்லது பொறியியல் படிப்புகளையோ தேர்வு செய்யப்போவதில்லை. அவர்களில் சிலர் மட்டுமே அந்தப் படிப்புகளைப் படிக்க ஆர்வம் கொண்டிருப்பார்கள். அந்தச் சிலருக்கு இன்னும் சற்று கூடுதலாகக் கவனம் செலுத்தி, அவர்களை ஊக்குவித்தால், மருத்துவம், பொறியியல் தொடர்பான நுழைவுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள இயலும்.

அரசுப் பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறை கல்விப் பிரிவுகளில் (அதாவது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம்) சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்வதுதான் இத்தகைய மாதிரிப் பள்ளிகளின் இலக்கு. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரிப் பள்ளியை உருவாக்க, நம் கழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் 10 பள்ளிகள், 2022 - 2023 ஆம் ஆண்டில் 15 மாதிரிப் பள்ளிகள் மற்றும் ஒரு கல்விசார் சிறப்பு மையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. 2023-2024 ஆம் ஆண்டில் 11 பள்ளிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. அதற்காக, சுமார் 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாதிரிப் பள்ளிகள் தொடக்க விழாவில்...




# கல்விசார் சிறப்பு மையம்
# இது ‘சூப்பர் 30’ அல்ல... அதற்கும் மேலே..!

அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றியும், மாணவர்களின் கல்வி, கலை மற்றும் விளையாட்டு போன்ற கூடுதல் பாடத்திட்டங்கள் உட்பட அவர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை அடிப்படையாகக் கொண்டும் மாதிரிப் பள்ளிகளில் சேர்க்கை நடைபெறுகிறது.

## முதல்வர்களுக்காக...!

இவ்வாறு ஒவ்வொரு மாவட்ட மாதிரிப் பள்ளியிலும் சிறப்பாகச் செயல்படும் சில மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்கள் அனைவருக்கும் ஒரே இடத்தில் பயிற்சி வழங்க ஏற்படுத்தப்பட்டதுதான் **‘சென்டர் ஆஃப் அகாடெமிக் எக்ஸலென்ஸ்’** எனப்படும் கல்விசார் சிறப்பு மையம். 2023 -ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கப் பட்ட இந்த மையம், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள மாதிரிப் பள்ளி வளாகத்துக்குள் இயங்கி வருகிறது.

2022-ஆம் ஆண்டு அரையாண்டுத் தேர்வு முடிந்தவுடன், அப்போது இயங்கி வந்த மாதிரிப் பள்ளிகளிலிருந்து (தமிழ், ஆங்கிலம் என இரண்டு மீடியங்களில் இருந்தும்) 12-ஆம் வகுப்பில் சிறப்பாகச் செயல்படும் 114 மாணவர்கள் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு, இந்த மையத்தில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு உணவு, இடம், கல்வி என அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டன. விளைவு..?

வேதியியலில் 12 பேரும், உயிரியலில் 7 பேரும், இயற்பியலில் 5 பேரும், கணிதத்தில் 3 பேரும், கணக்குப் பதிவியலில் 9 பேரும், வணிகப் பாடத்தில் 16 பேரும், வரலாறு பாடத்தில் 6 பேரும் சதம் அடித்துள்ளனர்.

அது மட்டுமல்ல. **இந்த மாணவர்களில் 25 பேர் ஐ.ஐ.டி. நடத்தும் ஜே.ஈ.ஈ. நுழைவுத் தேர்வையும், 58 பேர் நீட் நுழைவுத் தேர்வையும் எழுதி இருக்கிறார்கள்.** இதனால், இந்தக் கல்வியாண்டில், இந்த மையத்தில் படித்த கணிசமான அளவு மாணவர்கள் ஐ.ஐ.டி.க்கள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த மையத்தில் சிறப்புப் பயிற்சி என்பதோடு, மாணவர்கள் முன்பு இருக்கும் பல்வேறு வாய்ப்புகளைப் பற்றிய வழிகாட்டுதலும் வழங்கப்படுவதால், மருத்துவம், பொறியியல் ஆகியவற்றைத் தாண்டி, இதர படிப்புகள் குறித்தும் மாணவர்கள் விழிப்புணர்வுடனும் தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள்.

இனி, ஒன்றிய அரசு எத்தகைய தடையை நுழைவுத் தேர்வுகள் மூலம் ஏற்படுத்தினாலும், அதை உடைத்துக்கொண்டு மேலே செல்வார்கள் நம் ‘முதல்வர்’கள்..!

...சாதனை தொடரும்

## பொதிகை - 75

கலைச் செயல்பாடுகளில், மக்களுக்கான படைப்புகளில் சமரசம் செய்து கொள்ளாதவர் **தமிழியல் ஆய்வறிஞர் வே.மு.பொதியவெற்பன்.** கும்பகோணத்தில் **‘சிலிக்குயில்’** என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கி, தீவிரமான செயல்பாட்டாளராக இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் பணி செய்பவர்.

தற்போது, அகவை 75-ஐ தொட்ட அவருக்கு, பொதிகை-75 எனப் பவள விழா கருத்தரங்கு, நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகளை கோயம்புத்தூர், கும்பகோணம், சென்னை என மூன்று இடங்களில் நண்பர்கள் நடத்துகின்றனர்.

‘திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல்’, ‘பெரியாரும் தமிழியல் ஆய்வறிஞர்களும்’, ‘தமிழின் நிறமும் ஆரிய வர்ணமும்’, ‘சமயச்சார்பின்மை’ ஆகிய நூல்கள் இவரது திராவிட ஆய்வுக்குக் கட்டியம் சொல்பவை.

“அண்ணாவின் தேசியம் மிகவும் நெகிழ்ச்சியாக எல்லோரையும் உள்ளடக்கக் கூடியதாக என்றைக்குமே பாசிசமாக மாறிவிடாத ஒன்றாகக் கட்டமைக்கப்பட்டது. சகலவிதமான அடிப்படைவாத எண்ணம் கொண்டவர்களுக்கு இன்றளவும்கூட, அண்ணாவும் திராவிடக் கருத்தாக்கமும் ஜென்ம எதிரியாக இருப்பதற்கும் இதுவே அடிப்படை” என அண்ணாவின் கருத்தாக்கங்களை உயர்த்திப் பிடிக்கிறார் வே.மு.பொதியவெற்பன்.

## ஃப்ளாஷ்பேக்



## எப்போதும் நம்பர் ஒன்!



பிரபாகர்ராஜா

1997-ஆம் ஆண்டு, அசோக் நகரில் நடைபெற்ற வியாபாரிகள் சங்க ஆண்டு விழாவுக்கு, சென்னை மாநகராட்சி மேயராக இருந்த இன்றைய முதலமைச்சர்-கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அப்போது தென்சென்னை வணிகர் சங்கத்தில் தலைவர் பொறுப்பு வகித்துவந்த என் தந்தையிடம் தலைவரைப் பார்க்க அழைத்துச் செல்லும்படி அடம்பிடித்து அவரைப் பார்க்க வந்திருந்தேன். என்னைப் பார்த்ததும் மடியில் அமரவைத்து “என்ன படிக்கிறாய்?” என்றார் “ஆறாம் வகுப்பு படிக்கிறேன்” என்றேன். பிறகு, “நீயும் உன் தந்தையைப் போலவே எப்போதும் நம்பர் ஒன்றாக இருக்க வேண்டும்” என்று தெரிவித்தார். தலைவரிடத்தில் அன்று எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. இன்று நான் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர். அன்றிலிருந்து இன்று வரை அதே அரவணைப்பு தொடர்கிறது.


**-ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, சட்டப்பேரவை உறுப்பினர், விருகம்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்
### மாநில உரிமை

**1969-ஆம் ஆண்டு, ஒன்றிய, மாநில உரிமைகளை ஆய்வு செய்வதற்கு, நீதிபதி ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தார் கலைஞர். ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரம், எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என ஆராய்வது, அந்த குழுவின் நோக்கமாகும். குழுவை அமைத்தது தமிழ்நாடாக இருந்தாலும், குழுவின் பணியும், இடம்பெற்றவர்களும் இந்திய அளவிலிருந்தனர். அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் அடிப்படையில், 1974-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். அது தொடர்பாக, சட்டமன்றத்தில் நான்கு நாட்கள் விவாதம் நடைபெற்றது. மாநிலங்கள் சுயமரியாதையோடு வாழ, அந்தத் தீர்மானம் இன்றளவும் துணை நிற்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 118




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.